அம்பத்துார் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 489/2009

இந்த நீதிமன்றத்து உதவியாளர் செல்வி. உ. தாரணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2025ம் ஆண்டுஅக்டோபர் திங்கள் 13 –ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| வா.சா.1 | 13.10.2025 |
| பெயர் திருநாவுக்கரசு | தந்தை/ கணவர் பெயர் |
| தொழில் | வயது |
| இனம் | சமயம் |
| கிராமம் | வட்டம் |

6ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:–

1. வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். வழக்கில் முதல் பரிகாரமாக பாகபிரிவினை கோரியுள்ளேன் என்றால் சரிதான். முதல் பிரதிவாதி எனது தந்தை என்றால் சரிதான். அவருக்கு நான் , 2,3,6 பிரதிவாதிகள் வாரிசுகள் என்றால் சரிதான். வழக்கு சொத்துகள் பூர்வீக சொத்துகளா அல்லது எனது தந்தை சம்பாதித்த சொத்தா என்றால் எனது தந்தை சம்பாதித்த சொத்து. வா.சா.ஆ 6 ஆவணம் நான் , மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் ஏற்படுத்திக்கொண்ட பாகபிரிவினை பத்திரம் என்றால் சரிதான். வா.சா.ஆ 6 ஆவணத்தில் முதல் மற்றும் இரண்டாவது பக்கத்தில் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ 6 ஆவணத்தில் முதல் பக்கத்தில் எனது சகோதரி 6ம் பிரதிவாதி மல்லிகா என்பவர் ஒரு தரப்பினர்

என்றால் சரிதான். ஆனால் வா.சா.ஆ 6 ஆவணத்தில் 6ம் பிரதிவாதி கையெழுத்து இல்லை என்றால் சரிதான். சர்வே எண் 71 /2 சொத்திற்கு சம்மந்தமாக 3வது பக்கத்தில் தாய்தந்தையர் அனுபவித்துக்கொள்ளவேண்டியது பிள்ளைகளுக்கு உரிமையில்லை என்ற குறிப்பு உள்ளது என்றால் சரிதான்.

2. எனதுதந்தை 29.10.1998 அன்று பதிவு பெற்ற உயில்படி சர்வே எண் 71 /2 சொத்து எனது தந்தை சுயமாக சம்பாதித்த சொத்து என்பதால் அதனை 6ம் பிரதிவாதிக்கு சேரவேண்டும் என்று உயில் எழுதிவைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. மேலும் 10.02.2010 அன்று 1ம் பிரதிவாதியான என் தந்தை 6ம் பிரதிவாதிக்கு பதிவு செய்த செட்டில்மென்ட் ஆவணம் எண் 1174/2010 மூலம் சர்வே எண் 71 /2 சொத்து எழுதிவைத்துள்ளார் என்றால் தெரியாது. 6ம் பிரதிவாதி சர்வே எண் 71 /2 சொத்தில் அனுபவத்தில் உள்ளார் என்றால் எனக்கு தெரியாது. நான் கோரியுள்ள பாகபிரிவினை சொத்துகள் சம்மந்தமாக எனது சகோதரி 6 ம் பிரதிவாதிக்கும் item 2 in B schedule Property சமபங்கு உள்ளது என்றால் சரியல்ல.

3. வா.சா.ஆ 6 ஆவணத்திற்கு பிறகு தான் பாகபிரிவினை செய்து அவர்அவர் சொத்துகள் என்று பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான். பாகபிரிவினை பத்திரம் பதிவுசெய்யப்படாதது என்பதாலும் அரசாங்கத்திற்கு உரிமையான கட்டணம் செலுத்தாததாலும் அது நிலைக்க தக்கது அல்ல என்றால் அந்த காலத்தில் கூர்சிட்டு தான் நிலைக்கும் அதற்கு பதிவு செய்ய தேவையில்லை. வா.சா.ஆ 6 ஆவணத்தில் எனது சகோதரி 6ம் பிரதிவாதி கையொப்பம் பெறாமல் செய்யப்பட்டுள்ளதால் அது

நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. எனது தந்தை தான் அந்த ஆவணத்தை தயார் செய்தார். இந்த வழக்கு 2009 வருடத்தில் தாக்கல செய்தபோது எனது சகோதரியை ஒருதரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

4. 2011 வருடத்தில் 1ம் பிரதிவாதியான என் தந்தை இறந்தபோதும் அவரது வாரிசு என்ற முறையில் எனது சகோதரி கட்சி சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். 2021 வருடத்தில் எனது சகோதரி வழக்கு விவரங்கள் தெரிந்து கொண்டு அவரே மனுசெய்து வழக்கில் 6ம் பிரதிவாதியாக கட்சி சேர்க்கப்பட்டார் என்றால் சரியல்ல. எனது தந்தைக்கு 4 வாரிசுகள் என்றாலும் நான் கோரியுள்ள பரிகாரத்தில் 1/3 பங்கு தான் கோரியுள்ளேன் என்றாலும் எனவே முதல் பரிகாரம் செல்லதக்கது அல்ல என்றால் சரியல்ல. வழக்கில் காட்டப்பட்டுள்ள item 1 , item 2– A & B schedule சொத்து அனைத்திற்கும் சேர்த்து பாகபிரிவினை பரிகாரம் கேட்கப்பட்டுள்ளதா என்றால் எனக்கு விவரம் சரியாக தெரியவில்லை.

5. எனது அப்பா சம்பாதித்த சொத்தில் எனது சகோதரிக்கு பங்கு கொடுப்பேனா என்றால் எனது அப்பா தான் பாகபிரிவினை செய்தார் அவர் தான் எழுதி கொடுத்திருக்க வேண்டும். இந்து வாரிசு உரிமை சட்டம் படி எனது சகோதரி 6ம் பிரதிவாதிக்கு வழக்கு சொத்தில் சமபங்கு கிடைக்கவேண்டும் என்றால் சரியல்ல. சர்வே எண் 71/2 சம்மந்தமாக ஏற்கனவே 6ம் பிரதிவாதி பெயரில் செட்டில் மென்ட் ஆவணம் எழுதிவைத்துள்ளதால் அந்த சொத்து சம்மந்தமாக நான் பாகபிரிவினை கோரயிலாது என்றால் சரியல்ல. வா.சா. ஆ 6 கூர்சிட்டு முழுமையாக நிறைவேற்றப்படவில்லை என்பதால் அதன் மூலம் நான் பரிகாரம் கோர இயலாது என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பாகபிரிவினை பரிகாரத்தில்

எனது சகோரிக்கும் பங்குஉரிமை உண்டு என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது, மறு விசாரணை இல்லை.